# நயினார் நாகேந்திரனுடன் பனிப்போர் இல்லை

**பல்லடம், பிப். 10:** பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனுடன் தனக்கு பனிப்போர் எதுவும் இல்லை என்று அக்கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்தார்.

இது தொடர்பாக பல்லடத்தில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை அவர் கூறியதாவது:

இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் சுமுகமாகப் பேசி முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வர்த்தக ஒப்பந்தம் மூலமாக இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

எலக்ட்ரானிக் பொருள்கள் ஏற்றுமதியில் மத்திய திட்டத்தைப் பயன்படுத்தி தமிழகம் முன்னணியில் உள்ளது.

மத்திய அரசின் சார்பில் 5 திறன் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று கொங்கு பகுதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய அரசு யாருக்கும் ஓரவஞ்சனையாக செயல்படுவது கிடையாது. ரூ.14 லட்சம் கோடியில் அதிவேக ரயில்கள் உள்பட பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் பல திட்டங்கள் தமிழகத்துக்கும் அளிக்கப்படும் என்றார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் விஜய் சேருவாரா என்ற கேள்விக்கு டீயும், காபியும் ஒன்றாக முடியாது என்றார்.

நயினார் நாகேந்திரனுக்கும், உங்களுக்கும் இடையே பனிப்போர் நிலவுவதாக கூறுகிறார்களே என்ற கேள்விக்கு, அப்படி ஒன்றும் இல்லை. கட்சி அளிக்கும் வேலைகளை செய்து வருகிறேன் என்றார்.

அமைப்புச் செயலர் கேசவ விநாயகம் வெளியேற்றப்பட்டதற்கு நீங்கள்தான் காரணம் என்ற செய்திகள் வருகிறதே என்ற கேள்விக்கு, அவர் அரசியல்வாதி இல்லை. அவரது கடமையைச் செய்துவிட்டு அடுத்த பொறுப்புக்கு செல்கிறார் என்றார்.

பாஜக மாநிலப் பொதுச்செயலாளர் ஏ.பி. முருகானந்தம், திருப்பூர் வடக்கு மாவட்ட பாஜக தலைவர் கே.சி.எம்.பி.சீனிவாசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உதகையில் 8-ஆவது நாளாக சத்துணவு ஊழியர்கள் போராட்டம்

**உதகை, பிப்.10:** 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உதகையில் 8-ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் சத்துணவு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகம் முழுவதும் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி, உதகை ஏடிசி பகுதியில் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் 8-ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் சுஜாதா தலைமை வகித்தார். உதகை ஒன்றியச் செயலாளர் மேரி கில்டா முன்னிலை வகித்தார். ஓய்வுபெற்ற நிர்வாகி ராஜு பங்கேற்று பேசுகையில், அரசுத் துறை காலிப் பணியிடங்களில் பணிமூப்பு அடிப்படையில் சத்துணவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும்.

காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார். இதில், நிர்வாகிகள் சகுந்தலா, ரம்யா, ராஜலட்சுமி, கீதா, சுகுணா உள்பட 200-க்கும் மேற்பட்ட சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்றனர்.

# ஓய்வூதியர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் போராட்டம்

ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட ஓய்வூதியர்கள்.

**ஈரோடு, பிப்.10:** ஈரோட்டில் ஓய்வூதியர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற போராட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சங்கரன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

இதில், 70 வயது நிறைவு செய்த அனைத்து ஓய்வூதியர்களுக்கும் கூடுதல் ஓய்வூதியம் 10 சதவீதம் உயர்த்தி வழங்க வேண்டும். ஓய்வூதியம் தொகுத்து பெறும் காலத்தை 11 ஆண்டுகளாக குறைக்க வேண்டும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள அனைத்து குறைபாடுகளையும் களைந்து காசில்லா மருத்துவம் என்பதை உறுதி செய்ய வேண்டும். சத்துணவு, அங்கன்வாடி மற்றும் அவர்தம் நிலையில் உள்ள அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7,850 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள்:** தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில், ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு வட்டார துணைத் தலைவர் கலைவாணி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சிவகுமார் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். இதில், ஊரக வளர்ச்சித் துறையில் காலியாக உள்ள 1,500-க்கும் மேற்பட்ட ஊராட்சி செயலாளர்கள் பணியிடங்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குமேல் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவு காவலர் உள்ளிட்ட அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும். பணி மேற்பார்வையார் நிலையிலிருந்து உதவி பொறியாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

கலைஞரின் கனவு இல்லம் உள்ளிட்ட அனைத்து வீடுகள் கட்டும் திட்டங்களுக்கு ஏழை, எளிய மக்கள் வீட்டினை முழுமையாக சிரமமின்றி கட்டும் வகையில் அலகுத் தொகையை ரூ.6 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தி முழக்கம் எழுப்பப்பட்டது.

## அனைத்து துறை ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்

**உதகை, பிப்.10:** பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உதகையில் அனைத்து துறை ஓய்வூதியர்கள் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் நாகராஜன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

இதில், 70 வயதைக் கடந்தவர்களுக்கு10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.7,850 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டனர்.

இதில், தொலைதொடர்பு துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட பொறுப்பாளர் சதாசிவம், மாவட்ட பொருளாளர் பெரியய்யா, கூடலூர் வட்டச் செயலாளர் விஷ்ணுதாசன், கோத்தகிரி வட்ட துணைத் தலைவர் வில்லியம், குன்னூர் வட்டத் தலைவர் ராமன் குட்டி, உதகை வட்ட செயலாளர் நஞ்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட துணைத் தலைவர் ராமையா நன்றி கூறினார்.


CanFinHomes Ltd (Sponsor: CANARA BANK) HOME LOANS • DEPOSITS

**கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்**

CIN : L85110KA1987PLC008699

எண் 64 / 5, 2வது தளம், GRDI வளாகம், பெருந்துறைச் சாலை, ஈரோடு - 638 011.

Ph : 0424 - 2255563 / 200, M : 76250 79179. E-mail : erode@canfinhomes.com

**சொத்து கையகப்படுத்தும் அறிவிப்பு** - [விதி 8(1)] (அசையா சொத்துக்காக)

கேன்ஃபின் ஹோம்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, தில்லைநகர் கிளையின் அதிகாரம் பெற்ற அதிகாரி மூலம் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீர் அமைத்தல் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 - (SARFAESI) மற்றும் விதிகள் கீழ் **கடன்தாரர்கள் : திரு. N. சிவராஜ் மற்றும் திருமதி. N. காயத்ரி, ஆகியோர்களால் பெறப்பட்ட கடன் தொகை ரூ. 8,56,484/-** (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நானூற்று எண்பத்து நான்கு மட்டும்) **மேலும் ஒப்பந்த விகிதங்களில் வட்டி, அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்படும் தேதிவரை திரும்பச் செலுத்தம்படி 01/12/2025 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது.**

ஆனால் கடன் தொகையை கடன்தாரர் கட்டத் தவறிவிட்டதால் சட்டம் 2002 - (SARFAESI), செக்ஷன் 13 (4) ரூல் 8-ன் படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை **10/02/2026** அன்று கையகப்படுத்திக் கொண்டு விட்டது என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறது.

**இதன் மூலம் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13-ன் துணை பிரிவு 8-ன் படி அடமானமாக வைக்கப்பட்ட சொத்தினை மீட்டுக் கொள்வதற்கான கால அவகாச விவரங்கள் கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.**

ஆகவே, கடன்தாரரும், பொது மக்களும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை பொறுத்தவரை எந்த விதமான வில்லங்கமும் ஏற்படுத்தக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறார்கள். அவ்வாறு வில்லங்கம் ஏற்படுத்தினால் அது வங்கிக்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை **ரூ. 8,56,484/-(ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நானூற்று எண்பத்து நான்கு** மட்டும்) மற்றும் மின்வட்டிக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள பிணைக்கு உட்பட்டது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**அசையாச் சொத்து விவரங்கள்**

ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை துணை பதிவு மாவட்டம், பெருந்துறை தாலுக்கா, ஈங்கூர் கிராமத்தில் சர்வே எண் 351//1A1A - ல் "E. H. 62 ஈங்கூர் டெக்ஸ்", மனை எண் 92, 1584.5 சதுர அடி பரப்பளவில் சாலை, தெரு, கார்ட் டிராக் மற்றும் பிற அனைத்து மாமூல் உரிமைகளுடன் அமைந்துள்ளது. இதன் நான்கு எல்லைகள் : தெற்கே மனை எண் 91, மேற்கே 30 அடி அகல வசடதெற்குச் சாலை, வடக்கே மனை எண் 93 மற்றும் கிழக்கே மற்றவாகளின் சொத்து. இதன் பரப்பளவு : கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் 20 அடி மற்றும் வடக்கிலிருந்து வடக்கில் 48'3", தெற்கில் 55'6", வடக்கிலிருந்து தெற்காக கிழக்கில் 30'0" மற்றும் மேற்கில் 31'0", ஆக மொத்தம் 1584.5 சதுர அடி அல்லது 147.20 சதுர மீட்டர் பரப்பளவில் காலி நிலம் அமைந்துள்ளது.

தேதி : 10-02-2026
இடம் : ஈரோடு

ஒப்பம்/-
அதிகாரம் பெற்ற அதிகாரி, கேன் ஃபின் ஹோம்ஸ் லிட்.



பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

பாங்க் ஆஃப் பரோடா, ஈரோடு மெயின் கிளை, 184, தலைமை, VCTV மெயின் ரோடு, ஈரோடு, தமிழ்நாடு - 638 003
Email ID : erode@bankofbaroda.co.in

**சுருக்கப்பட்ட வாகன மின்னணு ஏல அறிவிப்பு**

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(களுக்கும்), அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடகு வைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தை, அனைத்து தரப்பினராலும் நிறைவேற்றப்பட்ட அடமானம் / கடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திவங்கியானது மீண்டும் கையகப்படுத்தியுள்ளது/கைப்பற்றியுள்ளது என்றும், இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கணக்கு/களிலிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு வாகனம், **"இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்"** மற்றும் **"இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கடன்தாரர்/கள் / வாகனம் / மொத்த நிலுவைகள் /அடிப்படை விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், டேவணித்தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு.ரவிசந்திரன். S,** த/பெ.செல்வராஜ், எண். C/132, கொல்லம்பாளையம், ஹவுசிங் யூனிட், ஈரோடு – 638 502.

| | |
|---|---|
| மொத்த நிலுவைத் தொகைகள் | ரூ.1,81,513.36 + 08.02.2026 முதல் ஒப்பந்த வட்டி + பிற கட்டணங்கள் |
| வாகன தயாரிப்பு & மாதிரி | DATSUN READY GO |
| வண்டி பதிவு எண். | TN 33 BS 2889 |
| மின்னணு ஏல நாள் & ஏல நேரம் – தொடங்கும் நேரம் முதல் முடிவடையும் நேரம் வரை | 05.03.2026 – பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |
| ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | 05.03.2026 அன்று பிற்பகல் 4.00 மணி வரை |
| அடிப்படை விலை | ரூ.1,08,000/- |
| குறைந்தபட்ச முன்வைப்புத் தொகை | ரூ.10,800/- |
| விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | ரூ.2,000/- |
| EMD வைப்பு கணக்கு எண் | 07630015181219 |
| IFSC குறியீடு | BARB0ERODEX |
| பாங்க் ஆஃப் பரோடா வங்கி கிளை | பாங்க் ஆஃப் பரோடா, ஈரோடு மெயின் கிளை |
| வாகனம் ஆய்வு நாள் & நேரம் | 05.03.2026 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை |

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு செய்து https://baanknet.com என்ற வலைத்தள இணைப்பை பார்க்கவும். மேலும் உத்தேசித்துள்ள ஏலதாரர்கள் திரு.சிவராமன், மொபைல் : 9176060206 மற்றும் கிளை எண். 04242214962, 9489205932.ல் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : ஈரோடு
நாள் : 09.02.2026

அதிகாரபூர்வ அலுவலர்,
பாங்க் ஆஃப் பரோடா, ஈரோடு மெயின் கிளை



கனரா வங்கி Canara Bank
சிண்டிகேட் Syndicate
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
தலைமை அலுவலகம் : பெங்களூரு
சென்னை வட்டார அலுவலகம்

**பிராந்திய அலுவலகம், ஈரோடு**
எண்.45, சத்தி ரோடு, ஈரோடு - 638 003.
போன் : 98947 42460
இமெயில் : recroerd@canarabank.com

**மின் ஏலம் விற்பனை நாள் : 27.02.2026**
**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை மறு சீரமைத்தல் சட்டம் 2002 (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) மற்றும் பிணைக்காப்பு நிதிச்சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (Security Interest (Enforcement) Rules, 2002)-ன் கீழ் உள்ள விதி எண்.8(6)-ன் பிரிவு நிபந்தனைகளின்படி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. பொது மக்களுக்குப் பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் உத்தரவாதமளித்தவர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையாச் சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை கனரா வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியால் ஆக்கபூர்வ கவாதீனம் (Constructive Possession) செய்துள்ள சொத்துக்களை கடன் வழங்கிய வங்கிக் கிளைக்கு வந்து சேரவேண்டிய கடன் பாக்கித் தொகையினை வசூலிக்கும் பொருட்டு, அசையாச் சொத்துக்களை 'உள்ளது உள்ளபடி', 'உள்ளது உள்ளவாறு' மற்றும் 'உள்ள இடத்தில் உள்ளவாறு' என்கிற அடிப்படையில் 27.02.2026 (காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை) (ஏலம் முடிவுறும் வரை 5 நிமிட அளவற்ற கால நீட்டிப்புடன்) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. மின் ஏல விற்பனை நடைபெறும் இணையதளம் https://baanknet.com/

| வ.எண். | கிளை பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்/பிணையாளர் பெயர் | அசையாச் சொத்துக்களின் விவரம் |
|---|---|---|
| 1. | கிளை : வெள்ளித்திருப்பூர் : காலஞ்சென்ற சுரேஷ்-ன் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் (கடன்தாரர்) மற்றும் காலஞ்சென்ற S ரங்கராஜின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் : 1. புஷ்பா S, க/பெ சுரேஷ் R, எண்.30A, சேக்கிழார் வீதி, நகராட்சி காலனி, வீரப்பன்சத்திரம், ஈரோடு – 638 004. 2. சுபாஷ் S, த/பெ சுரேஷ் R, எண்.30A, சேக்கிழார் வீதி, நகராட்சி காலனி, வீரப்பன்சத்திரம், ஈரோடு – 638 004. 3. திருமதி. ஜெயலட்சுமி R, க/பெ. ரங்கராஜ் S, ஈஸ்வரன் கோயில் வீதி, அம்மாபேட்டை, பவானி, ஈரோடு – 638311. | ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாபேட்டை சார் பதிவு மாவட்டம், அந்தியூர் தாலூகா, வெள்ளித்திருப்பூர் கிராமம், மறு சர்வே எண்.491/1A1A, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான கட்டிடத்துடன் கூடிய சொத்தமைந்த, APS நகர், மனை எண்.43க்கு எல்லைகள் விபரம் : வடக்கே – 23 அடி அகல கிழமேல் லேஅவுட் ரோடு, தெற்கே – மனை எண்.34, கிழக்கே – மனை எண்.42, மேற்கே – மனை எண்.44. இதில் அளவுகளாக, 30 அடி, கிழமேல் இருபுறமும், 50 அடி, தென்வடல் இருபுறமும், ஆக 1500 சதுரடி நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம் கூடிய, காலஞ்சென்ற R சுரேஷ் பெயரிலமைந்த சொத்து. |
| | மொத்த கடன்பாக்கி : 07.02.2026 தேதி அன்று ரூ.27,88,905.15 (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து மற்றும் பைசா பதினைந்து மட்டும்) மற்றும் 08.02.2026 விருந்து அதன் மீதான வட்டி + செலவுகள். | குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.23.50,000/- முன்வைப்புத் தொகை : ரூ.2,35,000/- ஏல மடங்கு : ரூ.10,000/- |
| | **முன்வைப்புத் தொகை செலுத்த கடைசித் தேதி மற்றும் நேரம் : 25.02.2026, மாலை 4.00 மணி வரை.** குறைந்தபட்ச வைப்புத் தொகை கயபதிவு முறை மூலம் BAANKNET E-Wallet -ல் நிறுவப்பட்டுள்ள https://baanknet.com/eauction-psb/bidder-registration என்ற இணையதளத்தில் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும். | |
| 2. | கிளை : சத்தியமங்கலம் : திரு. ஜெய்குமார் D, த/பெ. துரைசாமி, எண்.23/31, கரட்டூர் ரோடு, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு – 638 402. | கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் தாலூகா, கோணமூலை கிராமம், புதிய சர்வே எண்.93/1 (பழைய சர்வே எண்.48) இதிலுள்ளதும் அதன் பகுதியுமான 1.46.0 ஹெக்டேர் புஞ்சை நிலம், லேஅவுட் வீட்டு மனைகளாக ஆக்கப்பட்டதில், அதிலமைந்த மனை எண்.2 க்கு எல்லைகள் விபரம் : 20 அடி அகல தென்வடல் ரோடுக்குக் கிழக்கு, சர்வே எண்.93/6 ல் உள்ள ரங்கப்ப கவுண்டரின் நிலத்துக்கு மேற்கு, வீட்டு மனை எண்.3 க்கு வடக்கு, மனை எண்.2 மற்றொரு பாகத்திற்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், அளவுகளாக, தென்வடல் இருபுறமும் 27 அடி, கிழமேல் இருபுறமும் 53 அடி. இதில் வீட்டு மனை எண்.2 ன் தென்புறப் பகுதி 1431 சதுரடி நிலம், திரு. D.ஜெய்குமார் பெயரில் உள்ள சொத்து. |
| | மொத்த கடன்பாக்கி : 12.01.2026 தேதி அன்று ரூ.12,71,161.25 (ரூபாய் பனிரெண்டு லட்சத்து எழுபத்து ஓராயிரத்து நூற்று அறுபத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து ஐந்து மட்டும்) மற்றும் 13.01.2026 விருந்து அதன் மீதான வட்டி + செலவுகள். | குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.7.10,000/- முன்வைப்புத் தொகை : ரூ.71,000/- ஏல மடங்கு : ரூ.10,000/- |
| | **முன்வைப்புத் தொகை செலுத்த கடைசித் தேதி மற்றும் நேரம் : 25.02.2026, மாலை 4.00 மணி வரை.** குறைந்தபட்ச வைப்புத் தொகை கயபதிவு முறை மூலம் BAANKNET E-Wallet -ல் நிறுவப்பட்டுள்ள https://baanknet.com/eauction-psb/bidder-registration என்ற இணையதளத்தில் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும். | |
| 3. | கிளை : கோபிசெட்டிபாளையம் : 1. திருமதி. சிந்துமதி R, க/பெ. நந்தகுமார் R ... கடன்தாரர், 2. திரு. நந்தகுமார்.R, த/பெ. ரங்கசாமி O S ... உத்தரவாதமளித்தவர்/அடமானதாரர், இருவருக்கமான முகவரி: கதவு எண்.58/7, மாரியம்மன் கோவில் வீதி, பாலபாளையம், ஓடத்துறை கிராமம், பவானி தாலூகா, ஈரோடு மாவட்டம் – 638 476. | கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், கவுந்தபாடி சார் பதிவு மாவட்டம், பவானி தாலூகா, ஓடந்துறை கிராம நத்தம், புதிய சர்வே எண்.344/7 (நத்தம் மறுசர்வே எண்.706/18) ல் அடங்கியதும் அதன் பகுதியுமான சொத்து, கட்டிடம் ஏதேனுமிருப்பின் அத்துடன் பட்டா எண்.1651ன் கீழ், பாலப்பாளையத்தில் உள்ளது. இதன் எல்லைகள்- மேற்கே : சரோஜா சின்னசாமி வீடு, கிழக்கே : பட்டாவின் படி சகுந்தலாவின் மீத நிலம், தெற்கே : மாரியம்மன் கோவில், வடக்கே : கிழமேல் ஊராட்சி சாலை, இதனுட்பட்ட பு.எக்கர் 0.04 =1744 ச.அடிக்கு சமமான 162.02 சமீ நிலத்துடன் அதிலுள்ள ஒரு RCC தார்சு கட்டிடமும் அதன் கதவு நிலவுகளுடன் கதவு எண்.58/7, மின்சார இணைப்பு எண்.04-017-004-290 ஆகியவற்றுடன் ஆவணப்படியான மாமூல் வழித்தட வண்டித்தட உரிமைகள் சேர்ந்த சொத்து திரு.R.நந்தகுமார் பெயரிலுள்ளது. |
| | மொத்த கடன்பாக்கி : 07.02.2026 தேதி அன்று ரூ.64,92,187.59 (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா ஐம்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் 08.02.2026 விருந்து அதன் மீதான வட்டி + செலவுகள். | குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.25.60,000/- முன்வைப்புத் தொகை : ரூ.2.56,000/- ஏல மடங்கு : ரூ.10,000/- |
| | **முன்வைப்புத் தொகை செலுத்த கடைசித் தேதி மற்றும் நேரம் : 25.02.2026, மாலை 4.00 மணி வரை.** குறைந்தபட்ச வைப்புத் தொகை கயபதிவு முறை மூலம் BAANKNET E-Wallet -ல் நிறுவப்பட்டுள்ள https://baanknet.com/eauction-psb/bidder-registration என்ற இணையதளத்தில் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும். | |
| 4. | கிளை : வெள்ளித்திருப்பூர் : திரு. ஸ்ரீதர் M, த/பெ மேகநாதன், உரிமையாளர் : M/s.வேலா டெக்ஸ்,எண்.29, புதுவளவு, மாத்தூர் அஞ்சல், அந்தியூர் – 638 314. | ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாபேட்டை சார் பதிவு மாவட்டம், அந்தியூர் தாலூகா, மாத்தூர் கிராமம், பழைய சர்வே எண்.249, நத்தம் மறு சர்வே எண்.457/13, மறு சர்வே எண்.221/1, பட்டா எண்.231, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான கட்டிடத்துடன் கூடிய சொத்தின் எல்லைகள் விபரம் : நத்தம் மறு சர்வே எண்.457/21 ல் உள்ள அத்தாயம்மாள் மற்றும் பிறரது வீட்டுக்கு மற்றும் வீட்டு மனைக்கு வடக்கு, நஞ்சப்பனுக்குச் சொந்தமான வீட்டு மனைக்குத் தெற்கு, தென்வடல் ரோட்டுக்குக் கிழக்கு, மறு சர்வே எண்.221/2 ல் உள்ள தென்வடல் ரோட்டுக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், அளவுகளாக, 31½ அடி, தென்வடல் கிழபுறம், 28¼ அடி, தென்வடல் மேற்புறம், 59 அடி, கிழமேல் இருபுறமும், இந்த அளவுகளுள்ள 1269 சதுரடி நிலம் மற்றும் அங்குள்ள வீடு, திரு. M.ஸ்ரீதரின் பெயரிலமைந்த சொத்து. |
| | மொத்த கடன்பாக்கி : 31.01.2026 தேதி அன்று ரூ.19,04,829.22 (ரூபாய் பத்தொன்பது லட்சத்து நான்காயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்பது மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்) மற்றும் 01.02.2026 விருந்து அதன் மீதான வட்டி + செலவுகள். | குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.5.51,000/- முன்வைப்புத் தொகை : ரூ.55,100/- ஏல மடங்கு : ரூ.10,000/- |
| | **முன்வைப்புத் தொகை செலுத்த கடைசித் தேதி மற்றும் நேரம் : 25.02.2026, மாலை 4.00 மணி வரை.** குறைந்தபட்ச வைப்புத் தொகை கயபதிவு முறை மூலம் BAANKNET E-Wallet -ல் நிறுவப்பட்டுள்ள https://baanknet.com/eauction-psb/bidder-registration என்ற இணையதளத்தில் RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும். | |

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, கனரா வங்கியின் இணையதளத்திலுள்ள (www.canarabank.com) 'மின் ஏல' லிங்க்கினைப் பரிசீலிக்கவும் அல்லது சம்பந்தப்பட்ட கிளையினைத் தொடர்பு கொள்ளவும்/ வசூல் பிரிவு RO ஈரோடு போன் : 98947 42460 -ஐ வேலை நாளில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

தேதி : 07.02.2026
இடம் : ஈரோடு

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி



**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
(A Government of India Undertaking)
மண்டல அலுவலகம் : IOB டவர்ஸ், 12/1 A P T ரோடு, பார்க் ரோடு, ஈரோடு-638 003. போன் : 0424-2213165, 2214897

**அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு முறையிலான பொது ஏல அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல அறிவிப்பு மற்றும் மறுசீரமைப்பு பிணையங்கள் அமலாக்கத்தின் கீழ் நிதி சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டம் 2002, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6)ன் கீழ் உள்ள விதிமுறைகளின்படி படிக்கவும்.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரரின் சொத்து **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு, வங்கியானது பிரிவு 13 (2) சட்டமியற்றும் சட்டம் 2002ன் கீழ் கடன்தாரர் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறியதால், கீழ்க்கண்ட அசையாச் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில், உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் இதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு வங்கியின் நிலுவைகளை வட்டி மற்றும் இ